ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2341/51 - 2023 ජූලි මස 20 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.07.20

*2341/51 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூலை மாதம் 20 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**தேசிய பொலிஸ் ஆணைக்குழு**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் உறுப்புரை 155 ஒ ஏற்பாடுகளின் கீழ் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிப்பு*

1. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் உறுப்புரை 155 ஊ இற்கமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் அடிப்படையில், இலங்கை பொலிஸ் சேவையில் உள்ள உத்தியோகத்தர்களில் கீழ் குறிப்பிடப்பட்ட அட்டவணையில் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு, நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் தொடர்பில், III ஆம் நிரல் பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ள தத்துவங்கள், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் இத்தால் பொறுப்பளிக்கப்படுகின்றன.

அவ்வாறு இருந்த போதிலும், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் அதிகார கையளிப்பு தொடர்பில் அல்லது அவ் ஆணைக்குழுவினால் அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட எவையேனும் அதிகார கையளிப்பினை அமுல்படுத்துவது தொடர்பில் அல்லது ஏதேனும் பிரச்சினைகள் எழும் சந்தர்ப்பத்தில் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

அவ்வாறு இருந்த போதிலும் I ஆவது நிரலில் பணிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள், II ஆவது நிரலில் உரியவாறு பணிக்கப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தருக்கு எதிராக ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் போது, முறைப்பாட்டாளர் அல்லது சாட்சியாளர் அல்லது இயலுமை கொண்ட சாட்சியாளராக இருப்பின், இங்கு அட்டவணையில் III ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள நியமனம், பதவி உயர்வு, இடமாற்றம் மேற்கொள்ளல், ஒழுக்காற்று செயற்பாடுகள், சேவையில் இருந்து இடைநிறுத்தும் அதிகாரம், அது தொடர்பில் உரிய உத்தியோகத்தருக்கு எதிராக அதிகாரம் கையளிக்கப்படாதுள்ளதாக கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1A - G 39938 — 106 (2023/07)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பொலிஸ் மாஅதிபருக்கு மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தருக்கு இத்தால் பொறுப்பளிக்கப்படும் அதிகாரங்களை அமுல்படுத்தும் போது பொலிஸ்மா அதிபர் மற்றும் ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அனைத்து சந்தர்ப்பங்களிலும் எடுக்கப்படும் தீர்மானங்கள் அரசியல் யாப்பின் 155 ஒ ஆம் உறுப்புரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமித்தல், பதவி உயர்வு, இடமாற்றம் தொடர்பில் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளைப் போன்று அவ் ஆணைக்குழுவினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் ஒழுங்குவிதிகள், ஒழுங்கு முறைகள் மற்றும் ஏனைய நடைமுறைகளின் கீழ் அமுல்படுத்தப்பட வேண்டியதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் இத்தால் உரியவாறு பணிக்கப்படுகின்றது.

அவ்வாறு இருந்த போதிலும் (அரசியல் யாப்பின் 155 ஒ, உறுப்புரைக்கு அமைய) பொலிஸ் சேவைக்கு உரியதான அச் செயற்பாட்டு ஒழுங்குவிதிகள் மற்றும் நடைமுறைகள் மூலம் ஒழுங்குகள் வகுக்கப்படாத விடயங்கள் தொடர்பில் ஒழுங்குகள், கட்டளைகள், அல்லது செயற்பாட்டு ஒழுங்குகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் வரை, அரசியல் யாப்பின் 21 ஆவது திருத்தத்தினை அமுல்படுத்தும் தினமன்று அமுலில் இருந்த பொலிஸ் சேவை மற்றும் அது தொடர்பான அனைத்து ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்குவிதிகள், தேவையான மாற்றங்களுடன், அவ் ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் அல்லது ஒழுங்குவிதிகளில் வகுக்கப்பட்டுள்ள ஒழுங்குகள், கட்டளைகள் மற்றும் செயற்பாட்டு ஒழுங்குகளாக கருதி தொடர்ச்சியாக அமுல்படுத்த வேண்டியதுடன் அது பொலிஸ் சேவை தொடர்பில் உரியதாக இருக்க வேண்டும்.

3. அரசியல் யாப்பின் 155 ஒ உறுப்புரைக்கு அமைய தேசிய பொலிஸ் ஆணைக்குழுவிற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இவ் அட்டவணையில் உரியவாறு குறிப்பிடப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் இவ் ஆணைக்குழுவினால் நேரடியாக அமுல்படுத்தப்படும்.

4. இலக்கம் 2202 / 24 மற்றும் 2020.11.20 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இலக்கம் 2216/12 மற்றும் 2021.02.23 ஆம் திகதிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகார கையளிப்புக்களின் கீழ் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு பாதிப்புக்கள் ஏற்படாதவாறு மேற்கூறப்பட்ட அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதிகார கையளிப்பு தொடர்பில் இது வரையில் வெளியிடப்பட்டுள்ள ஏனைய விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள அதிகாரங்களை கையளிப்பு, இத்தால் இரத்தாகுவதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் இத்தால் உரியவாறு பணிக்கப்படுகின்றது.

5. இவ் அதிகார கையளிப்பு 2023.07.24 ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்பட வேண்டும் என இத்தால் பணிக்கப்படுகின்றது.

6. இவ் வர்த்தமானி அறிவித்தல் மூலம் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழி மூலங்களுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழி மூலமான வாசகம் மேலோங்கி இருக்கும்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உத்தரவுக் அமைய,

**ஈ. டபிள்யூ. எம். லலித் ஏகநாயக்க,**
தலைவர்,
தேசிய பொலிஸ் ஆணைக்குழு.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு,
09 ஆம் கட்டடம்,
பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகம்,
பௌத்தாலோக மாவத்தை,
கொழும்பு 07,
2023, யூலை 20.

**அட்டவணை**

| I ஆவது பகுதி | II ஆவது பகுதி | III ஆவது பகுதி |
|---|---|---|
| ***அதிகாரங்கள் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள்*** | ***பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள்*** | ***கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்*** |
| 1. பொலிஸ் மாஅதிபர் | (அ) பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் தரத்திற்கு கீழ் உள்ள பதவிகளின் பொலிஸ் உத்தியோகத்தர்கள்<br><br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோ கத்தர்கள். | (அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகள் அல்லது சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைய பொலிஸ் உத்தியோ கத்தர்களை நியமித்தல், இடமாற்றம் செய்தல் : (பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள், பிரிவு களுக்குப் பொறுப்பான உத்தியோ கத்தர்கள் தவிர)<br><br>(ஆ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கு அல்லது சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைய பதவி உயர்வு வழங்குதல் ; (விஷேட பதவி உயர்வு தவிர்ந்த)<br><br>(இ) தகுதிகாண் கால எல்லைக்குள் நிய மனத்தை இரத்துச் செய்தல் அல்லது சேவையினை முடிவுறுத்தல்.<br><br>(ஈ) தகுதிகாண் காலம் முடிவடைந்த அல்லது பதில் கடமை காலத்திற்குப் பின்னர் சேவையில் நிரந்நதரப்படுத்தல் அல்லது தகுதிகாண் கால எல்லை அல்லது பதில் கடமை காலத்தினை நீடித்தல்.<br><br>(உ) சேவையில் இருந்து இடைநிறுத்தல் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் ; (பொலிஸ் நிலையங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் கோட்டங்களின் பொறுப்பதிகாரிகளைத் தவிர)<br><br>(ஊ) பதவி வறிதாக்கல் தொடர்பான கடிதத்தினை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரித்தல்:<br><br>(எ) பதவி வறிதாக்கல் தொடர்பில் மேற் கொள்ளப்படும் கட்டளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறை யீட்டினை கருத்திற்கொள்ளல். |

| I ஆவது பகுதி | II அவது பகுதி | III ஆவது பகுதி |
|---|---|---|
| *அதிகாரங்கள் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள்* | *பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள்* | *கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
| 2. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (நிருவாகம்) | (அ) பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் தரத்திற்கு கீழ் உள்ள பதவிகளின் உத்தியோகத்தர்கள் (பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயற் பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பா ளர்களைத் தவிர)<br><br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோ கத்தர்கள் | (அ) தகுதிகாண் கால எல்லை அல்லது பதில் கடமை கால எல்லைக்குப் பின்னர் நியமனம்/சேவையில் நிரந்தரப்படுத்தல் அல்லது தகுதிகாண் காலம் அல்லது பதில் கடமைக் காலத்தினை நீடித்தல்.<br><br>(ஆ) தகுதிகாண் கால எல்லைக்குள் நிய மனத்தினை இரத்துச் செய்தல் அல்லது சேவையினை முடிவுறுத்தல்.<br><br>(இ) வினைத்திறன் தடைதாண்டல் தேவை யினை பூர்த்தி செய்யும் வகையில் தகுதிகாண் கால எல்லையினை உயர்ந்தபட்சம் மூன்று வருடங்கள் வரை நீடித்தல்.<br><br>(ஈ) சேவையில் இருந்து விலகும் கடிதத்தினை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல். |
| 3. சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் (நிருவாகம்) உட்பட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மாஅதிபர்கள். | (அ) பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் தரத்திற்கு கீழ் உள்ள பதவிகளின் உத்தியோகத்தர்கள் (பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயற் பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பா ளர்களைத் தவிர)<br><br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தி யோகத்தர்கள் | (அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்கு விதி முறைகளுக்கு அமைய தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றம் மேற்கொள்ளல்.<br><br>(ஆ) தமது நிருவாக அதிகாரப் பிரதே சத்திற்குள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, பதில் கடமைக் காலத்திற்குப் பின்னர் சேவையில் நிரந்தரப்படுத்தல் அல்லது பதில் கடமைக் காலத்தினை நீடித்தல்.<br><br>(இ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத் திற்குள் உத்தியோகத்தர் ஒருவர் அடுத்த பதவி அல்லது தரத்திற்கு பதவி உயர்வினை மேற்கொள்ளும் போது தேவையான கட்டாய பதில் கடமை சேவைக்கால எல்லை, ஒரு தடவையில் ஒரு வருடம் வீதம் உயர்ந்தபட்சம் மூன்று ஆண்டுகள் வரை சேவையினை நீடித்தல்.<br><br>(ஈ) தமது நிருவாக அதிகாரப் பிரதே சத்திற்குள் சேவையினை விட்டு விலகுவது தொடர்பில் மேற்கொள் ளப்படும் கட்டளைகளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மேன்முறை யீட்டினை கருத்திற் கொள்ளல்.<br><br>(உ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத் திற்குள் சேவையில் இருந்து இடை நிறுத்தல் உட்பட ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல். (சேவையில் இருந்து நீக்கம் தவிர) |

| I ஆவது பகுதி | II அவது பகுதி | III ஆவது பகுதி |
|---|---|---|
| *அதிகாரங்கள் வழங்கப்படும் உத்தியோகத்தர்கள்* | *பொலிஸ் உத்தியோகத்தர் பிரிவுகள்* | *கையளிக்கப்பட்ட அதிகாரங்கள்* |
| 4. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள். | (அ) பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் பிரதான பொலிஸ் பரிசோதகர் தரத்திற்கு கீழ் உள்ள பதவிகளின் உத்தியோகத்தர்கள் (பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பாளர்களைத் தவிர)<br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | (அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு அமைய தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றத்தினை மேற்கொள்ளல்.<br>(ஆ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் சேவையில் இருந்து இடைநிறுத்தல் மற்றும் ஒழுக்காற்று செயற்பாடுகள் (சேவையில் இருந்து நீக்கம் தவிர) |
| 5. பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள். | (அ) சாஜன் மேஜர் மற்றும் கீழ் உள்ள பதவிகள்<br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள். | பதவி வறிதாக்கல் தொடர்பில் மேற்கொள்ளப்படும் கட்டளைகளுக்கு எதிராக மேற்கொள்ளும் மேன்முறையீட்டினை கருத்திற் கொள்ளல். |
| 6. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள்/ பொலிஸ் அத்தியட்சகர்கள் (பிரதேச கோட்டத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள்/ செயற்பாட்டு கோட்டத்திற்குப் பொறுப்பான பணிப்பாளர்கள்). | (அ) பொலிஸ் பரிசோதகர் மற்றும் பொலிஸ் பரிசோதகர் தரத்திற்கு கீழ் உள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள் (பொலிஸ் நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பாளர்களைத் தவிர)<br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | (அ) தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட செயற்பாட்டு ஒழுங்குவிதிகளுக்கு தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் இடமாற்றத்தினை மேற்கொள்ளல்.<br>(ஆ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் சேவையினை இடைநிறுத்தல்.<br>(இ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறை (Orderly Room) தண்டனையினை விதித்தல். |
| 7. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் அத்தியட்சகர் | (அ) பொலிஸ் பரிசோதகர் மற்றும் அதற்கு கீழ் உள்ள பதவிகள் (பொலிஸ் நிலை யத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் மற்றும் செயற்பாட்டுப் பிரிவுகளின் பொறுப்பாளர்களைத் தவிர<br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள். | (அ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் சேவையினை இடைநிறுத்துதல் :<br>(ஆ) தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறை (Orderly Room) தண்டனை விதித்தல். |
| 8. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் | (அ) சாஜன் மேஜர் மற்றும் அதற்கு கீழ் உள்ள பதவிகள்<br>(ஆ) பொலிஸ் பாதுகாப்பு உதவி உத்தியோகத்தர்கள் | (அ). தமது நிருவாக அதிகாரப் பிரதேசத்திற்குள் ஒழுக்காற்று அறை (Orderly Room) தண்டனை விதித்தல். |

EOG 07-0194

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.